V9T

விருதுநகர் மாவட்டப் பொதுத் தேர்வுகள்
இரண்டாம் இடைப் பருவ பொதுத் தேர்வு - நவம்பர் 2022

வகுப்பு 9

தமிழ்

நேரம்: 1.30 மணி மதிப்பெண்கள்: 50

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 5×1=5

1) பூவாது காய்க்கும், மலர்க்கை அடிக்கோடிட்ட சொற்களுக்குரிய இலக்கணம் யாது?
அ) பெயரெச்சம், உவமைத்தொகை
ஆ) எதிர்மறைப் பெயரெச்சம், உருவகம்
இ) வினையெச்சம், உவமை
ஈ) எதிர்மறை வினையெச்சம், உவமைத்தொகை

2) பொருத்தமான விடையைத் தேர்வு செய்க:
அ) சிறுபஞ்சமூலம் - 1. காப்பிய இலக்கியம்
ஆ) குடும்பவிளக்கு - 2. சங்க இலக்கியம்
இ) சீவக சிந்தாமணி - 3. அற இலக்கியம்
ஈ) குறுந்தொகை - 4. தற்கால இலக்கியம்
க) அ-3, ஆ-4, இ-1, ஈ-2 உ) அ-2, ஆ-3, இ-1, ஈ-4
ங) அ-3, ஆ-1, இ-1, ஈ-2 ச) அ-4, ஆ-1, இ-2, ஈ-3

3) மரவேர் என்பது ............... புணர்ச்சி.
அ) இயல்பு ஆ) திரிதல் இ) தோன்றல் ஈ) கெடுதல்

4) பல்லவர் காலச் சிற்பக் கலைக்குச் சிறந்த சான்று
அ) மாமல்லபுரம் ஆ) பிள்ளையார்பட்டி
இ) திரிபுவனவீரேசுவரம் ஈ) தாடிக்கொம்பு

5) 'ஆழி' என்பதன் பொருள் .............
அ) தீவு ஆ) வயல் இ) கடல் ஈ) கூடம்

தமிழ்த்துகள்

II. எவையேனும் நான்கனுக்கு மட்டும் விடையளி: 4×2=8
குறிப்பு: 10ம் வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்கவும்.

6) சாரதா சட்டம் எதற்காக இயற்றப்பட்டது?
7) நீங்கள் மிகவும் விரும்பிப் படித்த நூல்கள் யாவை?
8) நடுகல் என்றால் என்ன?
9) செப்புத் திருமேனிகள் பற்றிக் குறிப்பு வரைக.
10) 'தூண்' என்று முடியும் குறளை அடிபிறழாமல் எழுது.

III. எவையேனும் ஐந்தனுக்கு மட்டும் விடையளி: 5×2=10

11) இடைச்சொற்களின் வகைகளில் எவையேனும் இரண்டு எழுதுக.
12) கலைச்சொல் எழுதுக:
தமிழ்த்துகள்
அ) Volunteer ஆ) Combination
13) உவமைத் தொடர்களை உருவகத் தொடர்களாக மாற்றுக:
அ) தேன் போன்ற மொழியைப் பவளவாய் திறந்து படித்தாள்.
14) மரபுப் பிழையை நீக்கி எழுதுக:
அ) இல்லத்தின் அருகே புதிதாகக் கூரை போட்டனர்.

www.Padasalai.Net

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

V9T

15) இடைச்சொற்களைக் கொண்டு தொடர்களை இணைக்க:

அ) அலுவலர் வந்தார்; அனைவரும் பதற்றம் அடைந்தனர்.

16) புணர்ச்சியின் வகைகள் யாவை?

**IV. எவையேனும் இரண்டனுக்கு விடையளி:** 2×3=6

17) சங்ககாலப் பெண்பாற் புலவர்களின் பெயர்களை எழுதுக.

18) ஆண்டாளின் கனவுக் காட்சியை எழுதுக. தமிழ்த்துகள்

19) மருத்துவர் முத்துலெட்சுமியின் சாதனையை குறிப்பிடுக.

**V. மனப்பாடப்பகுதி:** 5

20) 'சிறுபஞ்சமூலம்' பாடலை அடிபிறழாமல் எழுதுக.

**VI. நெடுவினாக்கள்:** 2×8=16

21) அ) உங்கள் பள்ளி நூலகத்திற்குத் தமிழ்-தமிழ்-ஆங்கிலம் என்னும் கையடக்க அகராதி படித்துப் படிகளைப் பதிவஞ்சலில் அனுப்புமாறு நெய்தல் பதிப்பகத்திற்கு ஒரு கடிதம் எழுது.

(அல்லது)

தமிழ்த்துகள்

ஆ) நூலகம், நூல்கள் ஆகியன குறித்து அண்ணாவின் வானொலி உரையில் வெளிப்படுத்தும் கருத்துகள் யாவை?

22) அ) இராவண காவியத்தில் உங்களை ஈர்த்த இயற்கை எழில் காட்சிகளை விவரிக்க.

(அல்லது)

ஆ) முழு உருவச் சிற்பங்கள், புடைப்புச் சிற்பங்கள் இரண்டிற்கும் உள்ள வேறுபாடு யாது?

----------

www.Padasalai.Net

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com